1979 மார்ச் 17]

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் பரம்பரையாக ஆடுகளை வளர்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த அரசாங்கம் ஏதாவது உதவிகள் செய்திருக்கிறதா ? அவர்களில் எத்தனைபேர், எத்தகைய கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இந்தக் கால்நடை வளர்ப்புத் துறை அறியுமா ?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : அது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு இதுவரையில் எந்தவிதமான புகாரும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. பொ. விஜயராகவன் : சார், நேற்றையதினம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் தார்ணா போராட்டம் நடத்தி 19 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுபற்றி அறையிலே கேட்கவேண்டுமே தவிர அவையில் கேட்கக்கூடாது. தயவு செய்து உட்காருங்கள். நான், என்ன பிரச்சனையை எடுத்துக் கொள்ளப் போகிறேன் என்பதைப் பார்த்துவிட்டு, அதன் பிறகு ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புங்கள்.

(ஆ) சட்டமன்றத் துறைக்கு போதுமான இடம் ஒதுக்குவது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் செம்மையாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. இங்கே ஆர். ஆர். செக்ஷன் என்று ஒன்று இருக்கிறது. அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் போய் நின்று, அல்லது உட்கார்ந்து எழுதிக் கொடுத்து, தட்டெழுத்து செய்து வாங்க வேண்டும். ஆனால் அங்கே உட்கார இடம் கிடையாது. ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டியிருக்கிறோம். இங்கே இருக்கின்ற மற்ற இலாக்காக்

[திரு. எம். ஏ. லத்தீப்]

களை அந்தக் கட்டடத்திற்கு மாற்றிவிட்டு, இந்தக் கட்டடத்தின் கீழ்ப்பகுதி முழுவதையும் சட்டமன்றத் துறைக்கு ஒதுக்கி இருக்கலாம். அப்படிச் செய்யாததால் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து எழுதுவதற்கு இடமில்லை ; சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள இடமில்லை. ஆர். ஆர். செக்ஷனில் போய் உட்கார்ந்து, எழுதி தட்டெழுத்தரிடம் கொடுத்து தட்டெழுத்து செய்து வாங்குவது பெரிய பிரச்சனையாக இருக்கிறது ; மிகுந்த வேதனையாக இருக்கிறது. அடிக்கடி அதைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லியும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அகவே, துணைத் தலைவரவர்களே, இதுபற்றி யோசனை செய்து குறைந்தபட்சம் உட்கார்ந்து எழுத ஒரு அறை, ஓய்வு எடுத்துக்கொள்ள ஒரு அறை என்று ஒதுக்குவதற்கு . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; சட்டமன்றம் பற்றிய டிமாண்ட் வரும்போது தங்களுடைய ஆலோசனைகளை எல்லாம் விரிவாகச் சொல்லலாம். அதுபற்றி தேவையான நடவடிக்கையை இலாகாவினர் எடுக்க வசதியாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தாங்கள் சட்டமன்ற மானியக் கோரிக்கை வரும்போது கூறலாம் என்று சொன்னீர்கள். அது நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சியின் இறுதியில் தான் வரும். ஏறத்தாழ இன்னும் ஒன்றரை மாதம் நாங்கள் பணியாற்ற வேண்டும். அந்த பலமாடிக் கட்டடம் கட்டுவதற்கு முன்பு இங்கே இருக்கிற மற்ற ஆபீஸ் எல்லாம் அங்கே மாற்றப்படும் என்றும், இந்தக் கட்டடத்தின் கீழ் மாடத்தில் இருக்கிற அறைகளை எல்லாம் சட்டமன்ற இலாக்காவுக்கு கொடுப்போம் என்றும் அரசு கூறியது. ஆகவே, இப்போதே அதைச் செய்வது உசிதமாக இருக்கும், வசதியாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சட்டமன்ற விடுதிக்கு முன்னால் ஒரு ரேடியோ வைத்திருக்கிறீர்கள். அது மத்தியில் இல்லாததால் ஆறாவது மாடியில் இருக்கிறவர்களுக்கு சரியாகக் கேட்கவில்லை . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்படும் என்று கூறுகிறீர்கள். இது அதிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. இது உடனடியாக

1979 மார்ச் 17] [திரு. து. இராமசாமி]

செய்ய வேண்டிய காரியமாக இருப்பதால் இரண்டொரு தினங்களில் இதற்கு ஒரு நல்ல முடிவை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதனை உடனடியாகப் பரிசலிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. திருவேங்கடம், திரு. வி. கே. கோதண்டராமன் இருவரும் எழுந்து நின்றனர்.)

உட்காருங்கள். இப்படியே 235 உறுப்பினர்களும் எழுந்து பேச ஆரம்பித்தால் எப்படி அவையை நடத்த முடியும்.

(இ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடைபெறும் திருட்டு குறித்து.

திரு க. மருதாசலம்: தலைவரவர்களே, நேற்று நான் சட்டமன்றத்திற்கு வரும்போது என்னுடைய அறையைப்பூட்டி விட்டு வந்தேன். அந்த அறையினுடைய பூட்டைத் திறந்து என்னுடைய இரண்டு புதிய சட்டைகளையும் இரண்டு புதிய வேஷ்டிகளையும் 368 ரூபாயையும் திருடிக்கொண்டு போய் விட்டார்கள்.

(கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற திருட்டு சம்பந்தமாக எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறை தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(மீண்டும் கூச்சல், குழப்பம்)

சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலும் பாதுகாப்பு அதிகரிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்னை

மின்சாரத்துறை அமைச்சர்மீது

மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் அடுத்து பேரவையின் 184-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரா. உமாநாத் அவர்கள் அவை உரிமைமீறல் பிரச்சினை குறித்து அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப் படுகிறது அதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்களும் அவை உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டு உள்ளார்.